வழங்கப்பட்டது. இந்தப் பணிகளெல்லாம் முடிவடைந்து, இத்திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 28-12-2015-ல் தொடங்கியிருக்கிறார்கள். இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.10 கோடியே 84 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 39,800 பேர் பயன்பெறுகின்றனர் என்றும், 4,170 வீட்டு இணைப்புகள் என்றும், 350 இணைப்புகள் இப்பேரூராட்சியில் கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். கண்டிப்பாக துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். திருச்செந்தூர் என்பது, தமிழ்நாடு மட்டுமல்ல, வெளிமாநிலங்களில் இருக்கிறவர்களெல்லாம் வரக்கூடிய பகுதியாகும். கண்டிப்பாக சிரமங்கள் இருந்திருக்கும். அது ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

35—

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***8766—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

2019 ஜூலை 4]

முற்பகல் 10-45

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே துயில் கொண்டிருக்கும் என்னுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை வணங்குகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுடைய நாடித் துடிப்பை அறிந்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசு என்னென்ன திட்டங்களைக் கொண்டுவந்ததோ, அந்தத் திட்டங்கள் அனைத்தையும் தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையாக, சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் குடிமராமத்து நாயகன், சேலத்துத் தங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம், எதிர்க்கட்சியினருடைய *உண்மைக்கு மாறான பிரச்சாரத்தையெல்லாம், ஹைட்ரோகார்பன் திட்டம் எப்படி வந்தது என்பதற்கு எதிர்க்கட்சிகள் செய்கின்ற * உண்மைக்கு மாறான பிரச்சாரத்தையெல்லாம் முறியடித்து, தமிழ்நாட்டு மக்களுக்கு தெள்ளத்தெளிவாக இந்த அவையிலே எடுத்துரைத்து, காவேரி டெல்டா பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் மனதிலே இருப்பவற்றையெல்லாம் விளக்கி இங்கே உண்மைக்கு மாறான செய்திகளை. . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தெளிவாகச் சொன்னார் என்பதைத்தான் சொன்னாரேயொழிய (குறுக்கீடுகள்) உறுப்பினர் சொன்ன ** பிரச்சாரம் என்ற வார்த்தையை மாற்றிவிடலாம். உண்மைக்கு மாறான என மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான செய்திகளை அவையிலே எடுத்துரைத்ததைத்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

தொடர்ந்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், சட்டப் பேரவையிலே தெள்ளத்தெளிவாக ஹைட்ரோகார்பன் திட்டம் எப்படி வந்தது, யார் மூலமாக வந்தது என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்து, இந்த அவையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் புரிந்துகொள்ளும் வகையிலே... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. புகழேந்தி, நீங்கள் முதலில் உங்கள் இடத்தில் உட்காருங்கள். சரி, போய் உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சக்கரபாணி, உங்கள் இடத்திற்குப் போங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்லிவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி சம்பந்தமாக, கலைக் கல்லூரி பற்றிப் பேச வேண்டுமே தவிர, நேற்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்கீழ் பேசியதை இன்றைக்கு கேள்வி நேரத்தில் பேசுவது ஏற்புடையது அல்ல. அப்படியென்றால், எங்களது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். இதை விவாதமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. உறுப்பினர் தொகுதி சம்பந்தமான பிரச்சினையைப் பேச வேண்டும். அதைவிடுத்து, நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்கீழ் பேசியதை இன்று பேசுவது ஏற்புடையதல்ல. அப்படி அவர் பேசினால் அதுகுறித்து நாங்களும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். எங்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு சொல்லியிருந்தால், (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். திரு. சக்கரபாணி, நான் சொல்வதை எல்லோரும் கொஞ்சம் கேளுங்கள். திரு. ஆஸ்டின், (குறுக்கீடுகள்)

2019 ஜூலை 4]

நீங்கள், உறுப்பினர் பேசியதற்கு உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வாய்ப்பு கேட்டீர்கள், இப்பொழுது நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். நேற்றைக்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னார் என்றுதான் அவர் சொன்னார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இந்தமாதிரி நேரத்தில் இந்தப் பக்கம் இருந்தும் அதுமாதிரி எல்லாம் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நான் தெளிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்லியிருந்தால் நிச்சயமாக நான் அதை நீக்கியிருப்பேன். ஒரு வார்த்தையைச் சொன்னார். அந்த வார்த்தையை நான் நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) ஒரு வார்த்தை தவறான வார்த்தை, அவைக் குறிப்பிற்கு வரக்கூடாத வார்த்தையைச் சொன்னார். அதை நான் நீக்கிவிட்டேன். அவ்வளவுதான். அதேமாதிரி குற்றச்சாட்டு இருந்தால் நிச்சயமாக நீக்கிவிடுவேன். அதுமட்டுமல்ல, நீங்கள் உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னீர்கள், அதற்கு உங்களுக்கு முழு வாய்ப்பு கொடுத்து, நீங்கள் அதற்கான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். நீங்கள் நினைப்பதைப்போல எல்லாவற்றையும் என்னால் நீக்கிக்கொண்டிருக்க முடியாது. அவர் குற்றச்சாட்டு சொல்லியிருந்தால் நான் நியாயமாக நீக்கியிருப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அதுமாதிரி பேசவேண்டாம். மாண்புமிகு உறுப்பினர், கேள்வி கேளுங்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரைப் பற்றியும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. நேற்றையதினம், எங்கள் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதற்கு நன்றி தெரிவித்துதான் பேசினேனேயொழிய, நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. குற்றச்சாட்டு சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களை, அதுவும் விவசாயிகளை பாதிக்கக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதிக்காது என்று ஆணித்தரமாகச் சொன்ன எங்கள் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜூலை 4

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலே உள்ள 11 தொகுதிகளில், எனது உளுந்தூர்பேட்டை தொகுதி என்பது பெரிய நிலப்பரப்பையும், அதிக மக்கள் தொகையையும் கொண்ட பெரிய தொகுதியாகும். அது 120 ஊராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியை உள்ளடக்கிய ஒரு பெரிய தொகுதியாக, மக்கள் தொகை அதிகமுள்ள தொகுதியாக விளங்குகிறது. அங்கே கிட்டத்தட்ட 17 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 2 மாதிரிப் பள்ளிகளும், 3 அரசு உதவி பெறும் பள்ளிகளும் இருக்கின்றன. அங்கு கிட்டத்தட்ட 4,500 மாணவர்கள் +2 படித்து வருகிறார்கள். ஆகவே, உளுந்தூர்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கல்லூரி அமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கே ஐ.டி. நிறுவனம் இருக்கிறது, அங்கே கிட்டத்தட்ட 35 ஏக்கர் நிலம் இருக்கிறது. எனவே, ஊளுந்தூர்பேட்டையை மையமாகக் கொண்டு ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி, என்ன? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நீங்கள் பொதுவானவர், நடுநிலையானவர். ஒரு மனிதனுக்கு எப்படி இதயம் முக்கியமானதோ, அதேபோன்று இந்தச் சட்டமன்றத்திற்கு கேள்வி நேரம் என்பது இதயம் போன்றது. மாண்புமிகு அமைச்சர்கள் தவிர, மற்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதி சம்பந்தமாகக் கேள்விகளைக் கேட்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், நேற்றைக்கு பேசிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பற்றி இன்றைக்கு கேள்வி நேரத்தில் பேசுவது என்பது ஏற்புடையது அல்ல. அதேபோன்று, எதிர்க் கட்சியில் நாங்கள், 100 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். நாங்கள் யாருமே அதுபோன்று பேசவே மாட்டோம். அப்படிப் பேசினால் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்கிவிடுங்கள். அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். அதேபோன்று, ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்றைக்கு

2019 ஜூலை 4]

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசியதைப் பற்றி இன்றைக்கு பேசுவது ஏற்புடையதல்ல. அது சபைக்கு மரபு அல்ல. எனவே, அதை நீங்கள் மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, அப்படிப்பட்ட பேச்சை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அவர் நன்றி சொல்ல வேண்டுமென்று சொன்னதால்தான் அனுமதியளித்தேன். (குறுக்கீடு) வேண்டாம், இத்துடன் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) சரி, இனிவரும் காலங்களில் பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய விழுப்புரம் மாவட்டத்தில் 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒன்றான டாக்டர் எம்.ஜி.அர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது விழுப்புரத்திலே இருக்கிறது. அதேபோன்று, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி ஒன்றும், அரசு உதவி பெறும் கல்லூரி ஒன்றும் அந்த மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதுமட்டுமல்லாமல், அங்கு 27 சுய நிதிக் கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில், கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களைப் பார்த்தோமானால், 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 311 இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றில், விழுப்புரத்தில் இருக்கக்கூடிய டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 79 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோன்று, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியில் 45 இடங்களும், சுயநிதிக் கல்லூரிகளில் 3,281 இடங்களும் தற்போது காலியாக இருக்கின்ற சூழ்நிலையிலும், ஏற்கெனவே, 2017-2018 ஆம் கல்வியாண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தை மையமாகக் கொண்டு மகளிர்க்கென்று தனியாக ஒரு கல்லூரியை வழங்கியிருக்கின்றார். எனவே, தற்போது அந்த மாவட்டத்திற்கு புதியதாக இன்னொரு கல்லூரி தேவைப்படுகின்ற நிலை உருவாகவில்லை என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

விழுப்புரம் மாவட்டம் பரந்த மாவட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பரந்த மாவட்டமாக இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைப் பார்த்தோமென்றால், இளநிலைப் பாடப் பிரிவில் நான்கும், முதுநிலைப் பாடப் பிரிவில் எட்டும், M.Phil-ல் பத்தும், Ph.D-ல் பத்தும் என அந்தக் கல்லூரிக்கு மட்டும் இவ்வளவு புதிய பாடப் பிரிவுகளை வழங்கியுள்ளார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், திண்டிவனத்தில் இருக்கக்கூடிய கோவிந்தசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளநிலைப் பாடப் பிரிவில் நான்கும், முதுநிலைப் பாடப் பிரிவில் ஒன்பதும், M.Phil-ல் மூன்றும், Ph.D-ல் இரண்டும் என அந்த மாவட்டத்திலுள்ள ஏழையெளிய மக்கள் அனைத்து பாடப் பிரிவுகளையும் படிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அதேபோல தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் எடப்பாடியார் அவர்களும் புதிய பாடப் பிரிவுகளை அந்த மாவட்டத்திற்கு அதிகமாக வழங்கியுள்ளார்கள். அனைவரும் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இச்சூழ்நிலையில்தான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகளிருக்கென்று தனியாக மேலும் ஒரு கல்லூரியை அமைக்க வேண்டும் என்று கேட்கின்றார். 2018-2019-ன் அடிப்படையிலே பார்க்கின்றபோது, அனைவரும் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலையை அரசானது அந்த மாவட்டத்தில் உருவாக்கித் தந்திருக்கின்றது. இனி எதிர்வரக்கூடிய காலக்கட்டங்களிலே, மேலும் புதிய கல்லூரி அங்கு தேவையெனில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களோடு கலந்து ஆலோசித்து, அங்கே புதியதாக ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

2019 ஜூலை 4]

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்திலே எத்தனை கல்லூரிகள் தொடங்கினோம் என்பதையெல்லாம் எடுத்துரைத்து, அதுவும் குறிப்பாக, இந்தியாவிலே உயர் கல்வியில் முதன்மை பெற்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை இங்கே பதிவு செய்தார்.* (மேசையைத் தட்டும் ஒலி) *2011-லிருந்து 2019 வரை கிட்டத்தட்ட 81 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் எல்லாம் தொடங்கி, வரலாற்றுச் சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்றார். ஆகவே, இந்த வேளையிலே நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்வது, எனது உளுந்தூர்பேட்டை தொகுதி கிராமப் பகுதிகள் இருக்கின்ற பகுதி. அங்கு ஏழையெளிய மக்கள் அதிகமாக இருக்கின்றார்கள். ஆகவே, உளுந்தூர்பேட்டையிலிருந்து விழுப்புரம், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் அதிகமான தூரம் பயணிக்க வேண்டியிருக்கின்ற காரணத்தினால், அங்கு மாணவர்கள் சென்று படிப்பதற்கு சிரமம் ஏற்படுகிறது. அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களிடம் இங்கே இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றேன். ஆகவே, இதை மனதிலே வைத்துக்கொண்டு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. குமரகுரு, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. இரா. குமரகுரு: *இதோ, சுருக்கமாகக் கேட்டு முடித்துவிடுகிறேன். ஆகவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துரைத்து, உளுந்தூர்பேட்டையில் ஒரு மகளிர் கலைக் கல்லூரி அல்லது ஒரு தொழில்நுட்பக் கல்லூரி இதில் ஏதாவது ஒரு கல்லூரியை உளுந்தூர்பேட்டையை மையமாகக் கொண்டு அமைத்துத் தருமாறு மீண்டும் ஒரு முறை உங்களைக் கேட்டு அமைகிறேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு அரசு கலை மற்றும் அறிவியல்*

கல்லூரியைத் துவக்க வேண்டுமென்றால், கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு 9 கோடியே 86 இலட்சத்து 84 ஆயிரத்து 300 ரூபாயும் 5 ஏக்கர் நிலமும் தேவைப்படுகிறது. அதுமட்டுமட்டுமல்லாமல், தொடரும் செலவினமாக ஒவ்வோர் ஆண்டும் ரூ.2 கோடியே 89 இலட்சத்து 66 ஆயிரத்து 143 ரூபாய் ஆகின்றது. விழுப்புரத்தில் மையமாக இருக்கிற அந்தக் கல்லூரியிலிருந்து 5 கிலோ மீட்டர் தாண்டினாலே அவருடைய சட்டமன்றத் தொகுதியின் எல்லை ஆரம்பிக்கிறது. அதேபோல் திருவெண்ணெய்நல்லூரிலே உறுப்புக் கல்லூரியாக இருந்ததை இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அரசுக் கல்லூரியாக மாற்றியிருக்கின்றார். உளூந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலே திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலிருந்து பாதிப் பகுதி சேருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கண்டிப்பாக மேலும் ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார். அந்த வகையிலே இப்பொழுது அந்தப் பகுதியிலே படிக்கின்ற மாணாக்கர்கள் யாருக்குமே அவர்கள் உயர் கல்விக்குச் செல்கின்ற வாய்ப்பு பறிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, மேலும் வரக்கூடிய காலக்கட்டங்களில் மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதமானது கூடுதலாக இருக்கின்றபொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் கலந்தாலோசித்து, அந்தப் பகுதியிலே அவசியம் ஒரு கல்லூரி தேவை என்கின்ற சூழ்நிலை உருவாகின்ற பட்சத்திலே அரசு கண்டிப்பாக பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகச் சிறப்பான வெற்றியினை எட்டி வருகிறது. அந்த அடிப்படையில் கடந்த ஆண்டில் மாண்புமிகு அம்மாவின் அரசு உயர் கல்வித் துறையில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை, அரசுக் கல்லூரிகளாக மாற்றி இந்திய துணைக் கண்டத்திலேயே மிகச் சிறப்பான சாதனையைப் படைத்தது. அந்த வகையில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உறுப்புக்*

2019 ஜூலை 4]

கல்லூரி, மதுரை வடக்கு தொகுதியில் அழகர்கோயில் சாலையில் முக்கிய பகுதியில் 5,000 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டும். அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், துறைச் செயலாளர் அவர்களிடமும் கடந்த ஆண்டே வேண்டுகோள் விடுத்து, அதற்கான வழிமுறைகளை ஆய்வதாகத் தெரிவித்து, அமைச்சர் அவர்கள் அதற்கான முன்பணிகளைச் செய்தார்கள். அந்த வகையிலே, அந்த கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மதுரையிலே இருக்கிற அண்ணா பல்கலைக்கழக மண்டலக் கல்லூரி, U.G.-ஐக் கொண்டு வருகிற அளவுக்கு, பொறியியல் கல்லூரியைக் கொண்டு வருகிற அளவிற்கு 5,000 மாணவர்களைக் கொண்டு உயர் கல்வித் துறையில் செயல்பட்ட கல்லூரி. முத்தூரில் இருக்கிற மதுரை மீனாட்சி கல்லூரியைத் தவிர அரசுக் கல்லூரியே மதுரை மாநகரில் இல்லை. ஆகவே, மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக்கிட உடனடியாக அரசாணை பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகள், 41 கல்லூரிகள் இருக்கின்றன என்பதை கணக்கில் எடுத்து, அவற்றை ஒட்டுமொத்தமாக அரசுக் கல்லூரிகளாக மாற்றுவேன் என்று அறிவித்து, முதல் கட்டமாக, அதிலே 14 கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்ற அரசாணை வெளியிடப்பட்டு, இன்றைக்கு அந்தக் கல்லூரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்கு அவையிலே எழுப்பிய கேள்வியை, ஏற்கெனவே இங்கே கேட்டிருக்கின்றார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் முதல் கட்டமாக 14*

கல்லூரிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு, அவை அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மீதமிருக்கக்கூடிய 27 கல்லூரிகளையும் கூடிய விரைவிலே அரசு கல்லூரிகளாக மாற்ற அரசாணை வெளியிடப்படும். ஏற்கெனவே இருந்த அரசாணையில்கூட காமராஜர் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட இரண்டு கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மதுரையில் உள்ள அந்தக் கல்லூரியையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. கண்டிப்பாக அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தக் கல்லூரியையும் அரசு கல்லூரியாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

அமுதம் பல்பொருள் அங்காடி

***17389—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், சூரக்கோட்டை ஊராட்சி, பெரிய புதுப்பட்டினம் கிராமத்தில் அமுதம் பல்பொருள் அங்காடியை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*